

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அண்ணா அறிவாலயத்தில், சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர், வழக்கறிஞர் வி.ஆர்.எஸ்.சம்பத் சந்தித்து பத்தாவது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பை முன்னிட்டு கலைஞர் தமிழ்நாட்டுக்கும், தமிழர்களுக்கும் செய்த பொருளாதார வளர்ச்சி மற்றும் கலைஞர் படத்திறப்பு நிகழ்ச்சியைத் தலைமையேற்று தொடங்கிவைக்குமாறு அழைப்பு விடுத்து அதற்கான அழைப்பிதழை வழங்கினார்.

### வெள்ளம் பாதித்த தென் மாவட்டங்களில்

## பள்ளி மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்க கணக்கெடுக்கும் பணி தொடங்கியது!

### தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் லியோனி தகவல்!

*நெல்லை, டிச. 26 -*

வெள்ளம் பாதித்த தென் மாவட்டங்களில் பள்ளி மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்க கணக்கெடுக்கும் பணி தொடங்கியது. நெல்லை, தூத்துக்குடி, குமரி, தென்காசியில் வெள்ளத்தில் புத்தகம் இழந்தவர்களுக்கு புதிய பாடப்புத்தகங்கள் வழங்கப்பட உள்ளன.

அரையாண்டு விடுமுறையை அடுத்து தலைமை ஆசிரியர்கள் மூலம் மாணவர்களை தொடர்பு கொண்டு கணக்கெடுக்கப்படுகிறது. புத்தகங்கள் வழங்க கணக்கெடுக்கும் பணி தொடங்கியுள்ளதாக தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர் லியோனி தகவல் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆழிகுடி ஊராட்சியில் நேற்று முன்தினம் (24.12.2023) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியை தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, அரிசி, பருப்பு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். மக்களைச் சந்தித்து அடிப்படைத் தேவைகளைக் கேட்டறிந்து, அவர்களின் கோரிக்கைகளை அனைத்தும் நிவர்த்தி செய்வதாக உறுதியளித்தார். தூத்துக்குடி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா உள்ளிட்டோர் உடனிருந்தார்.

### தென்மாவட்டங்களில் அதி கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

## 3வது கட்டமாக ரூ.10 லட்சம் மதிப்பில் நிவாரணப் பொருட்கள்!

### தே.மதியழகன் எம்.எல்.ஏ.விடம் கழகப் பிரமுகர் கே.வி.எஸ்.சீனிவாசன் வழங்கினார்!

*கிருஷ்ணகிரி, டிச. 26 -*

தென்மாவட்டங்களில் அதி கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 3வது கட்டமாக ரூ.10 லட்சம் மதிப்பில் நிவாரணப் பொருட்களை, கழக பிரமுகரும், காவேரிப்பட்டணத்தைச் சேர்ந்த தொழிலதிபருமான கே.வி.எஸ். சீனிவாசன் வழங்கினார்.

தென்மாவட்டங்களில் அதி கனமழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கலாம், என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், உணவு துறை அமைச்சருமான அர.சக்கரபாணி ஆலோசனையின் பேரில், கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப் பட்டணத்தைச் சேர்ந்த தி.மு.க. பிரமுகரும், தொழிலதிபருமான கே.வி.எஸ்.சீனிவாசன், 3வது கட்டமாக ரூ.10 லட்சம் மதிப்பில் அரிசி, பருப்பு, ரவை, கோதுமை, சமையல் எண்ணெய் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் அடங்கிய 1000 தொகுப்புகளை, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. விடம் வழங்கினார்.

அப்போது அவர் கூறியதாவது: -

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்கனவே 2 கட்டமாக ரூ.17.50 லட்சம் மதிப்பில் உணவு பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொருட்கள், விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் ஆட்சியர் கே.எம்.சரயு விடம் வழங்கப்பட்டது.

தற்போது 3வது கட்டமாக அதி கனமழையால் பாதிக்கப்பட்ட தென்மாவட்ட மக்களுக்கு ரூ.10 லட்சம் மதிப்பில் உணவுப்பொருட்கள் அடங்கிய நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்வின்போது, நகரச் செயலாளர் நவாப், நகராட்சி தலைவர் பரிதா நவாப், மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம், காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியச் செயலாளர் தேங்காய் சுப்பிரமணி, ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் பாபா மாதையன், காவேரிப்பட்டணம் நகர துணைச் செயலாளர் விஜயகுமார், இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் நாராயணமூர்த்தி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம், கோரம்பள்ளம் ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டனர். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கதன்தீப் சிங் பேடி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

